# மக்களை மக்களாக வாழச் செய்ய அடிப்படை

# கல்வி அவசியம்

———(o)———

## மக்களின் அறிவுவிளக்கமே அனைத்துக்கும் அடிப்படை

## கல்வியை வளர்க்க அனைவரும் ஒன்றுபடுக

———(o)———

### அனைத்திந்திய அடிப்படைக்கல்வி மாநாட்டில் அசாப் அலி பேச்சு

உணவு, உடை, இடம், கல்வி, உடல் நலம், அறிவு விளக்கம் இவையே மனித வாழ்க்கையின் அடிப்படை தேவைகள், அடிப்படைக் கல்வித்திட்டத்தின் மூலமே மக்கள் இவற்றைப் பெற இயலும். அறிவு விளக்கம் பெற்றால் தான் வாழ்க்கை நிலை உயரும். அங்ஙனம் அறிவு விளக்கம் பெற அடிப்படைக் காரணமாயிருப்பது கல்வி. எனவே, ஆரம்ப ஆசிரியர்கள் செய்யும் பணி மிகமிக இன்றியமையாததும், பொறுப்புவாய்ந்ததுமாகும். அடிப்படை கல்வியை வளர்க்கச் செய்யப்படும் முயற்சிகளனைத்தும் மக்களை முன்னேறச் செய்யும் முயற்சியாகும்.

அங்கல் என்னும் இடத்தில் அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய அடிப்படை கல்வி மாநாட்டில், ஓரிசாகவர்னர் தோழர் அசாப் அலி அவர்கள் வெளியிட்ட கருத்து தான் மேலே தரப்பட்டிருப்பது.

கல்வியின் அவசியத்தைப் பற்றி இதுகாறும் பலர் பலப்பல கூறியுள்ளனர். ஆனால் தோழர் அசாப்அலி அவர்கள் கூறியி[illegible] கருத்தினை வளக்கியவரும், கல்வியின் அடிப்படை நோக்கத்தைத் தெளிவுபடக்கூறி வரும் வேறு இல்லை என்று அதுமிகையாகாது

நாடாள வந்த அமைச்சர்கள், கல்வி வளர்ச்சியைத் தமது இரண்டாம் தரம் அல்லது மூன்றாந்தர பணியாகக் கருதுகின்றனரேயன்றி, நாட்டின் நலமனைத்துக்கும் அதுவே அடிப்படைக் காரணமாயுள்ளது என்பதை யாருமே உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

தோழர் அசாப் அலி கூறுகிறார், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவது கல்வி என்று அத்தகைய கல்விக்கு—மக்களின் அறிவு விளக்கத்துக்குக் காரணமாயுள்ள கலவிக்கு—மக்களை மக்களாக வாழச் செய்யவல்ல கல்விக்கு நமது ஆட்சியாளர்கள் காட்டும் ஆதரவு என்ன? பணமில்லையேயென கையை விரிக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் அனாவசியமான விவகாரங்களுக்கு, தேவையற்ற காரியங்களுக்கு பணத்தைப் பணம் என்று பாராமல் அள்ளி வீசுகின்றனர். அண்மையில் வெளியான செய்தி ஒன்றிலிருந்து இந்திய சர்க்கார் பிரசாரத்துக்கு மாத்திரம் 25 லட்சம் ரூபாய் செலவிடுகின்றனர் என்ற உண்மை தெரியவருகிறது. இதுமட்டுமா, அயல் நாட்டுத் தூதவரின் ஆடம்பர வாழ்வுக்கென பல லட்ச ரூபாய்கள்பாழாக்கப்படுகிறது அமைச்சர்கள் நாடு சுற்றி வர ஆயிரக்கணக்கில் செலவிடப்படுகிறது. வரவேற்புகள், விருந்துகள், இன்னபிற டம்டோபச்செலவுகளுக்கு பணம் இருக்கிறது, இந்தஆட்சியாளரிடம். ஆனால் அறிவை வளர்க்கும் கல்விக்கு பணமில்லை என்கின்றனர். என்னே விந்தை!

தோழர் அசாப்அலி மேலும் பேசுகையில், இங்ஙனம் இன்றியமையாத வேண்டப்படும் கல்விக்கு ஆதரவு காட்டும் பணியில அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு, அதே சமயத்தில் அரசியலாருக்குப் ஒரு சூடு கொடுத்திருக்கிறார். அதாவது சர்க்கார் என்பது மக்களுக்கு அப்பாற்பட்டதல்ல எனகிறார். இதிலிருந்து அரசாங்கமும், மக்களும் வெவ்வேறல்ல, மக்களுடைய வாழ்வே ஆட்சி முறையின் வாழ்வாகும் மக்கள் வாழ்வு கெடின் ஆட்சி முறையும் கெடும் என்ற உண்மை புலனாகிறது.

எனவே, ஆட்சியாளர் மற்றத் துறைகளில் செலவிடும் வீண் செலவைச் சற்றுக் குறைத்துத் தோழர் அசாப் அலி சுட்டிக்காட்டியுள்ளது போல் அனைத்துக்கும் அடிப்படையாக விளக்கும் அறிவு விளக்கப்பணிக்குப் பணத்தை செலவிடவேண்டும். இதுவே ஆட்சியாளர் ஆற்றவேண்டிய அடிப்படைப் பணி. இந்த அடிப்படைப் பணியில் அவர்கள் நாட்டம் செலுத்தத் தவறினால், ஆட்சிப்பீடமே ஆடத்தொடங்கிவிடும் என்பதை நாம் விளக்கவும் வேண்டுமோ!"


Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (11—4—50) வெளியூர் (12—4—50) [ இதழ் 221


## "இலட்சிய வரலாறு" வழக்கு

### மே 10-ந் தேதிக்கு ஒத்திவைப்பு

சென்னை, ஏப். 10—

"இலட்சிய வரலாறு" என்ற புத்தகத்தைத் திட்டியதற்காக திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி என். அண்ணாத்துரை மீது தொடுக்கப்பட்ட வழக்கு இன்று பகல், முதல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்[illegible]கள், தோழர்கள் [illegible] அண்ணாத்துரை, பி. ராதாகிருஷ்ணன், டி. வி. கண்ணன், டி. வி. முத்துகிருஷ்ணன் ஆகியவர்களாவார்கள்.

புத்தகம் திட்டியதற்காகத் தோழர் சி என், அண்ணாத்துரை அவர்களும், அச்சடித்ததாகத் தோழர் பி. ராதாகிருஷ்ணனும், வெளியிட்டதற்காகத் தோழர்கள் டி. வி. கண்ணன். டி.வி முத்துகிருஷ்ணன் ஆகியோரும் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

வழக்கு விசாரணை மேமாதம் 10ந்தேதிக்குத் தள்ளிவைத்திருப்பதாக, முதல் மாகாண மாஜிஸ்ட்ரேட் அறிவித்தார்.

தோழர் அண்ணாத்துரைக்காக தோழர் நாராயணசாமி முதலியார் அவர்களும், மூன்றாவது நான்காவது குற்றவாளிகளுக்காகத் தோழர் பார்த்தசாரதி நாயக்கர் அவர்களும் கோர்ட்டில் வாதிடப்போவதாக அறிவித்தார்கள். (ந-நி)

## இந்தியா-பாக்ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

புது டில்லி, ஏப். 8—

சிறுபான்மையோர் சம்பந்தமாக இந்தியா—பாக்கிஸ்தான் இடையே இன்று ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது

இன்று பிற்பகல் தோழர் லியாகத் அலிகான் கராச்சிகுத் திரும்பினார். அதற்கு முன் இரு பிரதம மந்திரிகளும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

பண்டிதநேரும்வு,தோழர்லியாகத் அலியும் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் உரையாடியதாக சொல்லப்படுகிறது.

நேரு-லியாகத் அலி ஒப்பந்த ஷரத்துக்கள் திங்கட்கிழமை யன்று கராச்சி, டில்லி ஆகிய இரு இடங்களிலிருந்தும் வெளியிடப்படுமெனத் தெரிகிறது.

## "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?" வழக்கு

சென்னை. ஏப். 10—

தோழர் வியாழன் (புலவர் பு. செல்வராஜ்) திட்டிய "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?" என்ற புத்தகத்தைத் தடைசெய்து தொடரப்பட்ட வழக்கு இன்று முதல்மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மே மாதம் 10-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தோழர் வியாழன் (புலவர் செல்வராஜ்) மீது புத்தகம் திட்டியதற்காகவும், அச்சடித்து வெளியிட்டதற்காகத் தோழர்கள் திருநாவுக்கரசு, மூர்த்தி ஆகியவர்களும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள்.

தோழர்கள் ராமபிரசாத் ராவ், ஜெஸுஸ் ஸ்ன் காதர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக விவாதிப்பார்கள்.

## பிரிட்டன் உணவுக்கு அதிக விலை தர நேரிடும்

லண்டன், ஏப். 10—

அடுத்த வாரம் செவ்வாய்கிழமை அன்று ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் சமர்ப்பிக்கவிருக்கும் பட்ஜெட்டில் உணவு சப்ளை செலவிற்காக சர்க்கார் கொடுத்துவரும் பண உதவியில் ரூ. 65 கோடி முதல் ரூ. 78 கோடி வரை குறைக்கப்படவிருக்கும் என்று தெரிகிறது என்று 'லண்டன் டைம்ஸ்'' அரசியல் நிருபர் அறிவிக்கிறார்.

இதனால் ரேஷன் செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் விலை ஏறும் என்றும், பீர், புகையிலை இவைகள் மீதுள்ள வரி குறைக்கப்படலாம் என்றும் அவர் கூறுகிறார்.

## மணவறையில் பரிசோதனை

### பிராங்கோ மகள் திருமணத்தில் மலர்ச்செண்டுகள் சோதிக்கப்பட்டன

மாட்ரிட், ஏப். 10—

ஜெனரல் பிராங்கோவின் ஒரே மகள் காரல்மன் பிராங்கோ (23-வயது) விற்கும், கௌண்டி டி ஆரகைல் குமாரன் வில்லாவர்டே மார்க்விஸ் (27-வயது)க்கும் இன்று திருமணம் நடைபெறுகிறது. சுமார் 700 விருந்தினர்கள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

இத்திருமணத்தில் உபயோகிக்கப்படும் பூச்செண்டுகளில், பூக்கள் மட்டும்தான் இருக்கின்றனவா அல்லது வெடிகுண்டும் ஒளித்துவைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பரிசோதிக்கப்படுகின்றன.

ஸ்பெயின்மன்னர் ஆல்பானஸோவும், ராணி விக்டோரியாவும், வெடிகுண்டு விபத்திலிருந்து மயிரிழையில் தப்பியது இங்கு ஞாபகப்படுத்தப்படுகிறது.

———

பீரட்: ஏப். 10—

இஸ்ரேல் லெபனன் சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகும் வரை லெபனீஸ்—யூதர் சமாதான ஏற்பாடு நீடிக்கும் என்று கூறப்படுகிறது. —ரூனோய்

### ஸ்காட்லாந்தில் அம்மைநோய்

லண்டன், ஏப். 10—

கிளாஸ்கோவில் பரவியுள்ள அம்மை வியாதியால் மூன்றுவது நான் நபர் ஒருவர் மாண்டிருக்கிறார். ஆஸ்பத்திரியில் 19பேர் அம்மைக்காக சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் மூவர் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

## சென்னையில் அரிசி இறக்குமதி

### ஒன்றரை லட்சம் டன்களுக்குமேல் எதிர்பார்க்கப்படுகிறது

சென்னை, ஏப். 10—

சென்னை மாநிலத்திற்கு இவ்வாண்டு கீழ்க்கண்டுள்ள அரிசி இறக்குமதி மற்ற மாகாணங்களிலிருந்தும், பிரதமகமிஷனர் மாகாணங்களிலிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரிஸ்ஸா, 60 000 டன்கள்; உத்தரபிரதேசம் 40,000 டன்கள்; கூர்க் 3,000 டன்கள்; விந்திய பிரதேசம் 4,000 டன்கள்; மேற்குவங்காளம் 30,000 டன்கள்; மத்தியப் பிரதேசம் 11 000 டன்கள்; மத்திய ஸ்டோரேஜிலிருந்து வெளியூர்களிலிருந்தும் 1,807 டன்கள்.

இவ்வாண்டிற்கு இவைகள் யாவும் சேர்க்கப்பட்டால், சுமார் 1,54,307 டன் அரிசி எதிர்பார்க்கப்படுகிறது. இது சுமார் 75,000 டன் அரிசி சென்னை மாநிலம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 11—4—50 செவ்வாய்க்கிழமை

# மனப்போக்கு :: :: மாற வேண்டும்!

**"நல்லெண்ணம் மலர்ந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையை நீங்கள் கெடுத்துவிட மாட்டீர்கள் என்று நம்புகிறேன்."**

* * *

"மோசமான முரடர்கள்!—கொஞ்சமாவது பிரியம், நேற்று வரை இருந்தோமே கூட்டாக என்ற எண்ணம் ஏதாவது தென்படுகிறதா—பாரேன், ஒரே மிரட்டல்!"

"வரப்போகிறாராமே—செய்தி வந்திருக்கிறது. புறப்பட்டுக் கூட விட்டாராம்!"

"என்னப்பா, ஆச்சரியம்—யானை பூனையாகி விட்டது போலப் பேசுகிறாயே-வராமல் எங்கே போவதாம்!"

"வந்தது ஏன் தெரியுமோ?-ஜம்பம் இனிச் சாயாது என்பது புரிந்துவிட்டது. போக்கிடம் நம்மை விட்டால் ஏது? அதுதான் ஆள் வந்திருக்கிறார்."

* * *

இத்தனை எண்ணங்கள் உலவின—அவர் வரப்போகிறார்—வந்துவிட்டார் என்ற செய்திகளைக் கேட்டபொழுது. வந்ததற்கு வகை வகையான காரணங்கள் — சில பத்திரிகைகளில் கிளம்பின!

ஆனால் அவர் வந்தார்-வந்த காரியம் முடிந்தது—முகத்தில் புது மலர்ச்சி! புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் தன் ஊருக்குப் போக.

அப்போது, "திருப்திதானே உங்களுக்கு!" என்று ஒருவர் போய்க் கேட்டாராம். கேட்டவர், விருந்து வைத்து, உபசரித்து அனுப்பும் சராசரி 'ஜனங்களில்' ஒருவரல்ல; பத்திரிகை நிருபர்! வந்து திரும்பியவரும், விருந்துக்கு வந்து 'நல்ல உபசரிப்பு நடந்தது. ஏனடாகமான சமையல்! ரொம்பத் திருப்தி!' என்று கூறி விட்டுச் செல்லும் சாதாரண விருந்தாளியல்ல; ஒரு நாட்டின் பிரதமர்!

வந்தக் காரியமும் சாதாரணமானதல்ல. பீதி! குழப்பம்! மனக்கவலை! எழுப்பும் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு கட்டும் நோக்கத்துடன் வந்தவர்—கத்திக்கும் குண்டுக்கும் இரையாகி, கதறித் துடித்து மடியும் மனிதக் கூட்டத்தைக் கண்டு மனம் பதறி வந்தவர்—மாச்சரியம்அகற்றி, சுமுகமான நிலையைக்காண வேண்டும் என்ற கருத்தோடு வந்து, எடுத்த காரியம் கைகூடி விட்டது என்ற குதூகலச் சிரிப்புடன் கைகூப்பி விடை பெற்றுக்கொள்ளும் வேளையில் "திருப்திதானே," என்பதாகக் கேட்டிருக்கிறார் நிருபர்.

கேள்வியின் கேலிக்குரலும், கிண்டலும் தொனித்ததாலே என்னவோ, இந்தியா வந்து சர்க்காருடன் பேசி சந்தோஷ முடிவுடன் கராச்சி திரும்பிய பாக்கிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான், நாம் தலைப்பில் தந்திருக்கும் பதிலைத் தந்திருக்கிறார்.

**"நல்லெண்ணம்மலர்ந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையை நீங்கள் கெடுத்துவிட மாட்டீர்கள் என்று நம்புகிறேன்!"**

கூர்ந்து கவனியுங்கள்...... இது பசிலாகத் தெரியாது. வேகங்கலந்த வேண்டுகோள் என்று விளங்கும்!

* * *

மோசமான ஆட்கள்-பிடித்த முயலுக்கு இரண்டே கால்கள் என்று பிதற்றுகிறார்கள்!"

"கொஞ்சமாவது தயா தாட்சணியம் தென்படுகிறதா, பாரேன்! மிரட்டுகிறார்கள்—போருக்குக்கூடப் புறப்படுவார்களாம்!"

"பேசாமலிரப்பா! பேச்சால் முடிந்திடுமோ—பார்க்கிறாயே தெரிகிறதல்லவா அவர்கள் வேதனை நிலை!"

இதுபோன்ற கருத்துகளைப்பரவவிடும் கட்டுரைகள்—பிரசங்கங்கள்!

சுடு சொல்! வசைமாரி! எல்லாம், எடுத்தெறியப்பட்டன சில பத்திரிகைகளால்—வெறிச்செயல் எழுப்பும் வேதனையோடு பேரம் பேசும் பிம்பங்களால்!

இவைத அவர் சட்டை செய்யவில்லை—பாகிஸ்தான் பத்திரிகைகள் சிலவற்றின் போக்கையும் அங்குள்ள 'விஷம் வைத்து விளையாட விரும்புவோர்' நிலையையும் பொருட்படுத்தாது, இந்தியப் பிரதமர்நேரு மகிழ்ச்சியோடு வரவேற்றார், விமான நிலையம் சென்று—அழைத்து வந்தார், அரசாங்க உபசாரங்கள் நடைபெற்றன, அன்பு—பரிமாறிக் கொள்ளப்பட்டது பேச்சுவார்த்தைகள் பரஸ்பரம் அன்புள்ளத்தோடு நடைபெற்றன, சுமுகமான முடிவும் ஏற்பட்டது; ஒப்பந்தமும் கையெழுத்தாயிற்று.

* * *

இருநாடுகளிலும் வாழும் சிறுபான்மையோர் நிலை குறித்து. இரண்டு நாட்டுப் பிரதமர்களும் செய்திருக்கும் உடன்பாடு, எவருக்கும் மகிழ்ச்சி தரக் கூடியது.

இருநாடுகளிடையும் பகைமை வளருகிறது, இது படுநாசம் விளைக்கும்—இது நல்லதல்லவே,என் செய்வது?-என்று ஏங்கியோருக்குப் புது டெல்லி சந்திப்பு, 'புதையல்' போன்றதாகும், மகிழ்ச்சிதரும் சம்பவமாகும்.

பாகிஸ்தான் பிரதமர் காராச்சிக்குப் புறப்படுகையில் 'மீண்டும் வருவேன்' என்று கூறிச் சென்றுள்ளார். இந்தியப் பிரதமர்—நேருவையும் 'வருக' என்று அழைத்திருக்கிறார். நேருவும் விரைவில் செல்லப்போகிறார்.

புதுடெல்லி நிகழ்ச்சியால் இரண்டு நாடுகளிடையும் காரணமில்லாது பிரிந்து வந்த வேற்றுமை நிலை, மறையும் காட்சித் தென்படுகிறது.

மகிழ்ச்சிதரும் நிலை இது; மனதில் குரோதமும், நெஞ்சில் வஞ்சமும், நேர்மையில் வழுக்கிவிழுந்தோருமே இந்த நன்நிலை கண்டு நடுக்கங்கொள்வர்—மனமருட்சியடைவர்.

பாகிஸ்தான்!—ஒருபோது இக்குரல். வேதனையாகயிருந்தது காங்கிரஸ் நண்பர்களுக்கு. விரும்பத் தகாதது, வீண் முயற்சி, வெத்துவெட்டு என்ற 'அர்ச்சனை'களால் தூற்றப்பட்டது.

ஆனால் ......கனவென்று நினைத்தது நனவாயிற்று. கண்முன்னர் பத்துகோடி முஸ்லிம்களுக்கென தனிநாடு உருவாயிற்று; கண்டித்த காங்கிரஸ் கட்சியினரின் ஒப்புதலோடுகூட!

இரு நாடுகள் ஏற்பட்டன; எனினும் பழைய பகைமையுணர்ச்சிமாறவில்லை. எல்லோரிடையும் என்றெல்ல, மக்களின் ஒரு பகுதியினரால்! "மாற்றம் கூடாது தாயைத் துண்டாடக் கூடாது. அது பாவம்" என்று பக்திப் பாசத்தோடு கருதியவரால்!

சுடுசொல் கூறல், வதந்திக் கணைகள், வம்புதூண்டும் எழுத்துக்கள், வெறுப்பை [illegible]ப்பும் விளக்கங்கள் [illegible]மை ப்பாசத்தை" [illegible]ராதவெறி" யாக்கிக் கொண்டோரால்.

இதன் விளைவு—தகராறுகள் உருவாயின. மாச்சரியம் மக்கள் மனத்திலும் உருவாயிற்று- பிரச்னைகள் பல கிளம்பின. 'வட்டேனுபார்' என்ற டலம் பார்க்கும் 'பயில்வான்களாக இருநாட்டு சர்க்காரின் போக்கும் நீடித்து வருகிறது.

இந்த இக்கட்டான நிலையில், வங்கத்தில் எழுந்த வகுப்புவெறி, இரண்டு நாட்டுப் பிரதமர்களையும் சந்திக்கச் செய்தது.

இரு நாட்டுப் பிரதமர்களும் கூடினர்—குதூகலத்தோடு அளவளாவினர், மகிழ்ச்சியும் மலர்ச்சியும் அவர்கள் முகங்களிலே ஒளி வீசுகின்றன, படங்களில் அக்காட்சியைக் காணும்போது, எவருக்கும், இதயம் பூரிக்கவே செய்யும்.

சுடு சொல்-வேக வார்த்தைகள் இருநாடுகளிலுமுள்ள பத்திரிகைகளாலும் 'பயில்வான்' ஆக விரும்பியோராலும் ஒவ்வொரு நாட்டுப் பிரதமர் மீதும் வீசப்பட்டன மாச்சரியம் விரியுமோ, மன வேதனை அதிகமாகுமோ என்று கவலைப்படும் அளவில் நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் இரண்டு நாட்டுப் பிரதமர்களும், இரு நாட்டின் பிரதிநிதிகளாகச் சந்திப்பது மகிழ்ச்சியைத் தரும் நற்செய்தியாகும்

நற்செய்தி-நாராசம் போலத் தென்பட்டிருக்கிறது அவர்களுக்கு—மத்திய சர்க்காரின் மந்திரிகளாயிருக்கும் **டாக்டர் முகர்ஜி, கே. சி. நியோகி** ஆகியோருக்கு, விசித்திரமான நிலை. குத்து வெட்டுக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கும் வேதனைக் காட்சிப் பொறுக்காது; அது பற்றிப் பேசத் துவங்குவது—பிடிக்கவில்லையாம்!

**"இருவரும் ராஜினமா கடிதம் கொடுத்துவிட்டார்கள்."**

**"வகுப்புப் பிரச்னையைத் தீர்க்க சர்க்கார் கையாளும் போக்கு காண வருந்தியே மந்திரிப் பதவியிலிருந்து விலகுகிறார்கள்."**

இதுபோன்ற தகவல்கள் வந்தன. 'இந்திய சர்க்கார், அகதிகள் வுவதியை, நீக்கக் கையாளும் முறையும், சிறுபான்மையோர் சிக்கல் தீர்க்க எடுக்கும் நடவடிக்கையும் எங்களுக்குப் பிடிக்கவில்லை,—இதுதான் இவர்கள் ராஜினமாவுக்குக் காரணமாம்! எந்த நேரத்தில் தோன்றியது இந்த அகதிகள் அனுதாபம்?—பாகிஸ்தான் பிரதமர் டெல்லி வருகிறார் என்ற தகவல் பெற்றதும், ராஜினமா செய்யப் போகிறார்கள் இவர்கள் என்று செய்தி வந்தது. வந்தவர், காரியம் முடிந்து திரும்புவதற்குள், இவர்கள் ராஜினமா உண்மைதான் என்று தகவல் வெளிவந்திருக்கிறது.

நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும்போக்கை ஒழிக்கும் சூழ்நிலை உதயமாகும் நேரம் பார்த்து 'ராஜினமா' சமர்ப்பித்திருக்கிறார்கள—மந்திரிகள் மக்கள் நலனுக்காக உழைக்கும் உத்தமர்கள் என்று கூறப்பட்டவர்கள்!

'சிறுபான்மையோர் பிரச்னை தீர நேருவுக்கும், லியாகத் அலிக்குமிடையே உடன்பாடு கையெழுத்தானது எந்[illegible] நேரமோ, அந்த மணியோடு தாங்கள் வகித்த பதவியை விட்டு விலகிவிட்டதாக அறிவித்துள்ளனராம். சென்னை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'விசேஷ நிருபர் அறிவித்துள்ளார்!

மக்களின் வாழ்வைப் பாதிக்கும் கொலை நிகழ்ச்சியைத் தடுக்க கூடி, ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர்-அந்த நேரத்திலிருந்து தங்கள் பதவியிலிருநதுவிலகிவிட்டதாக அறிவிக்கின்றனர், அமைச்சர்கள்!

'டு, விட்டுவிடுவேன். அவனோடு நீ பேசியது தெரிந்தால் என்று மண்வீடு கட்டி விளையாடும் சிறு பிள்ளைகள் பேசிக் கொள்வார்கள். அதைப் போல நடந்துகொண்டிருக்கின்றனர்—அமைச்சர்கள்—ஒரு பரந்த உபகண்டத்தை நிர்வகித்த மந்திரிமார்கள்! அதுவும் 'பெரிய பிரச்னை' யென்று கருதப்பட்ட ஒரு நாட்டுடன் நட்பு நிலை உண்டாகும் நேரத்தில்!

* * *

"திருப்தி தானே" என்று நிருபர் கேட்டார், திருப்தியுடன் ஊருக்குப் புறப்பட்ட பாகிஸ்தான் பிரதமரை நோக்கி. அவர், 'நல்ல நிலையைக் கெடுத்து விடாதீர்கள்' என்று, பதில் தந்திருக்கிறார்.

நிருபரின் கேள்வி, அவசியமில்லாதது, என்றும் கேட்டிருக்கிறார்—கிண்டல் நினைப்புடன்!

மந்திரிமார்கள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நட்பு உதயம் ஆகும் நேரத்தில் ராஜினமா செய்கிறார்கள்-எது கூடாது என்று கூறப்படுகிறதோ, அதையே காரணமாகக் காட்டிக் கொண்டு!

நீண்ட நாட்களாகத் தகராறும், சச்சரவும் நிலவிக் கொண்டிருக்கும் இரு நாடுகளிடையும் நல்லுறவு உதயமாக வேண்டும்—நட்பு மலர வேண்டும்—என்று விரும்புகின்றனர். இருநாடுகளிலுமுள்ள நல்லோர் யாவரும் இந்நன்நிலை யேற்படும் நிலை உதயமானது கண்டு உள்ளம் பூரிக்கின்றனர்.

எனினும், இந்தப் புது நிலை காண பொறுக்காத 'புண்யாத்மாக்கள்' கூட இருப்பது—இந்த இரு சம்பவங்கள் நமக்குத் தரும் செய்தி!

பாகிஸ்தானும் — இந்தியாவும் பரஸ்பர சகோதர நாடுகள்! கூடியிருந்து பிரிந்துசென்ற குடும்பங்கள்-எனவே, ஒரு நாட்டின் கால வாழ்வு இன்னொரு நாட்டின் நல்வாழ்வுடன் பிணைந்து கிடக்கிறது. தொல்லைகளும், உள்நாட்டுத் தகராறுகளும், வறுமையும், வாட்டமும்—இந்தியாவில் என்று மட்டுமல்ல, பாகிஸ்தானிலும் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் வீம்புக்கு இதயத்தில் இடந்தந்து, வெறுப்பை அனலாக்கி, வேதனையை விளையாட்டாகக் கொண்டால்—இரு நாட்டின் எதிர்காலமும் பாழாகும். மக்கள் மலர்ச்சோலை மந்தி விளையாட்டுக்கிடமானதாகிவிடும்!

இது ஏற்படாது தடுக்கும் புது நிலை, இரண்டு நாடுகளின் சர்க்காரிடையிலும் அரும்பியிருக்கிறது.

அரும்பு—மலராகி—பிஞ்சாகி-காயாகி—கனியாகவேண்டிய சூழ்நிலை விளையவேண்டும். அந்த நாளே, பயமும் சஞ்சலமுமற்ற நன்னாள்.

அந்நாளைச் சிருஷ்டிக்கும் பணியில் பொறுப்புள்ளோர் தங்களை அர்ப்பணிக்கவேண்டும். இந்த மாபெரும் பணியின் மகத்தான பொறுப்பு பத்திரிகைகளுடையது. [illegible] வாக்கு [illegible]ளுடையது! எனவே, வேதனையூட்டும் 'முகர்ஜி சம்பவம்', 'நிருபர் போக்கு' மாறி, நாட்டை நற்போக்குப் பாதையில் நடத்திச் செல்லும் சூழ்நிலையை சிருஷ்டிக்க வேண்டுகிறோம்— பொறுப்புள்ள பத்திரிகைகளை, தலைவர்களை!

---

## மதுரை ஜில்லாவிற்கு மற்றொரு சாலை

சென்னை, ஏப். 10—

மதுரை ஜில்லாவிலுள்ள பெரிய குளத்தைச் சார்ந்த சின்னமனூருக்கும் சங்கராபுரத்திற்கும் (மார்க்கையன் கோட்டை வழியாக) இடையே 5 மைல் சாலை போடுவதற்கு மதுரை ஜில்லா போர்டு தீர்மானித்து விட்டது.

மார்க்கையன் கோட்டையிலுள்ள சுற்றுவட்டாரமும், ரஸ்தா அமைப்பு போர்டின் காரியதரிசியான தேமூர் எம். ஆர். வெங்கட்ராவும், அக்கிராமத்தின் வாசிகளும், ரஸ்தா அமைப்பதற்குத் தங்கள் நிலங்களைக் கொடுத்து உதவியிருக்கின்றனர்.

இப்பொழுது ரஸ்தா போடும் வேலை ஆரம்பமாகிவிட்டது.

---

## எஸ்கிமோக்களுக்கு கல்வி

ஆட்டவா, ஏப். 10—

எஸ்கிமோக்களுக்குக்கல்வி அறிவும், வாழும் வகையும் புகட்டுவதற்காக அவர்களுக்குப் புரியும்படியான மொழியில் சித்திரங்களுடன் கூடிய புத்தகங்களை ராயல் கனடிய போலீசார் விநியோகம் செய்து வருகின்றனர்.

குழந்தைகளை வளர்ப்பதெப்படி என்பதும் இதில் விளக்கப்பட்டிருப்பதால் நீக்ரோ பெண்களுக்கு இது மிகவும் உபயோகமாக இருக்கிறது.

இப்புஸ்தகத்தின் புதுப் பதிப்பில் சர்க்கார் பிரஜா உரிமை முதலியவை பற்றிய விஷயங்களும் சேர்க்கப்படும் எனத் தெரிகிறது.

# பட்டுக்கோட்டையார் பாதைசென்று, பழமையினைச்சாடுவோம்!

## தபால்களைத் தடை செய்வது அறிவுடைமையாகாது!

—(0)—

### மதுரையில் தோழர் மு. கருணாநிதி

2-4-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு மதுரை திராவிட மறுமலர்ச்சிமன்ற சார்பில், தமுக்க மைதானத்தில் (Peoples Park) நடைபெற்ற அழகிரி நினைவுநாள் மாபெரும்பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசியதின் சுருக்கமாவது:—

அன்புத் தலைவர் அவர்களே! ஆர்வமிக்க தோழர்களே! தாய்மார்களே! மிகமிக நெருக்கடியான நேரத்தில், தளபதி அழகர்சாமி நம்மைவிட்டுப் பிரிந்தார். நமக்குள்ள வருத்தமெல்லாம்... நமக்காக, நாட்டுக்காக உழைத்த அந்த உத்தமருக்குக் கடைசி காலத்தில் சரியானபடி நன்றி தெரிவித்துக்கொள்ளமுடியவில்லையே என்பதுதான். மரண மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் போது, நம்மால் கவனிக்கப்பட முடியாத அந்த மாவீரனுக்கு இப்போது நினைவுநாள் விழா கொண்டாடுவது வேதனையும், வெட்கமும் தருகிற செய்தியான் என்றாலும்... இனியாவது நம் இயக்க வரலாற்றில் நீங்க இழிநிலை ஏற்படாது பாதுகாத்துக்கொள்ள இந்த விழா பயன்படுமோ.

மேடையிலே அழகிரி ஏறிவிட்டால் சிங்கத்தின் குரல் கிளம்பும் — புலியின் [illegible] வின் [illegible] இனிமை வீசும். அத்தகைய அழகிரி பேசும், அந்நாளில் இதோ நீங்கள் கூடியிருப்பதுபோல ஐம்பதுயிரம்பேர் கூடுவதில்லை. இன்று மாலைகள் போடுகிறீர்கள்... அன்று மறுப்புக் கூச்சல் கிளம்பும். இன்று கைபெழுத்து வாங்கப் போட்டி போடுகிறீர்கள். அன்று கல்மாரி பொழியும். அத்தகைய காடுமுரடான பாதையில் தான். அழகிரியின் கருத்தறிவுப் பணம்நடைபெற்றது. அழகிரியை யாரும் அசைக்க முடியவில்லை. பட்டுக்கோட்டை சாடிமுத்த அவர்களின் மனபலத்தால் அழியாத அழகிரி—பார்ப்பனிய வட்டாரங்களின் சாபத்தால் அழியாத அழகிரி—மதகுருக்களின் மருட்டுதலுக்கு அழியாத அழகிரி—வெறும் சாதாரண கண்ணுக்குத் தெரியாத க்ஷயரோகக் கிருமிகள் படையெடுப்பால் அழிந்துவிட்டார். ஆம் அவரது உடல்தான் அழிந்தது. புகழ், அழியாத. சித்திரமாக—கலையாத உருவமாக அமைந்துவிட்டது.

#### ரமணரைக் காண்க!

அழகர்சாமி அவர்கள் விட்டுப்போன வேலைகள் நம்மால் தொடர்ந்து செய்யப்படவேண்டும். அவருடைய சாவைவிட நம்முடைய நாட்டில் சோதனைகள் ஏராளம். அழகிரி மறைந்தபோது மட்டுமல்ல—மாயவரம் நடராசன், நாகைமணி ஆகிய சுமரிவர்க்க வீரர்கள் மறைந்தபோதெல்லாம் மறுமைப்பித்துடையோர் "பார்த்தாயா சு. ம. வை!... பகவான் தப்ப ஆபுளில் முடித்து விட்டார்" என்றுபரிகாசம் புரியத்தவறவில்லை. அவர்களெல்லாம் நம்போன்ற 'பாவி'கள் பக்கம் திரும்புகிற கேலிப்பார்வையைத் தயவு செய்து பகவான் ரமணர் பக்கம் சற்றுத் திருப்பட்டும்- கொடிய புற்று நோயினால் அவர் கஷ்டப்படுவது கூட கடவுளின் சோதனைதானு என்பதைக் கொஞ்சம் ஆராயட்டும். இனிமேலாவது அவர்கள் புரிந்துகொள்ளட்டும்... சாவு 'சர்வேஷ்வரன்' செயல் தானு?... அது 'அவன்' அருளால் நிகழ்த்தப்படக்கூடியதாகு?... என்பதை!

#### பத்திரிகைப் பலம்

இன்றைய பத்திரிகை உலகத்தின் பித்தலாட்டத்தினுல் ரமணர் போன்றவர்களுக்கு "தெய்வீக சக்தி" உயர்ந்து கொண்டுபோகலாம். ஆனால் விரைவில் மக்கள் விழிப்படைவார்கள். விழிப்புக்கான விடி வெள்ளி முளைத்து விட்டது. பத்திரிகை பலத்தால் வளர்க்கப்பட்ட காங்கிரசின் நிலைமை என்ன இன்று? காங்கிரசின் முன்னே கைகட்டி-சாணிக்கை கொட்டிய டல ஏடேன். இன்று காங்கிரசுக்கு எதிர்ப்புப்பரணி பாடுகின்றன. அக்கிரகாரத்தின் இதழ்க்கான ஆனந்த விகடன் அலறுகிறது. காங்கிரசை நல்வழியில் நடத்த ஒரு எதிர்கட்சி அவசியமாகத் தேவை யென்று எழுதுகிறது. கேலிச் சித்திரங்களின் மூலமாக காங்கிரசை கவரப்படுத்துகிறது. ... வரையும் காங்கிரசைகள்லாக்...... காமராஜர்களின் கர்ஜனைகள் பெண்டைக்காளேும். காங்கிரஸ் புனிதமான கட்சி... அதில் கள்ளமார்க்கெட்காரர்களே கிடையாது என்கிறார் காமராஜர்!... இதோ 'லிங்கு'ன் மார்கெட் டிலிருக்கிறது என்கிறார் பிரகாசம். கோட்டைக்குள்ளே ஏற்படும் இந்தக் குத்து வெட்டு, காங்கிரஸ் கோட்டை சரிகிறது என்பதற்கான அறிகுறி.

மக்கள் மன்றத்திலே இன்றைய சர்க்காருக்கு மதிப்பில்லை. நிச்சயமாக இல்லை. ஒரு கோடி ரூபாய் கஷ்டம் ஏற்படுகிறது என்று காரணம் காட்டி தஞ்சல் இலாகா ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுகிறார்களே... இது உருப்படக்கூடிய திட்டமா? ஞாயிற்றுக்கிழமை போடுகிற கடிதம் திங்கள்று கிடைக்காது. சனிக்கிழமை போடுகிற கடிதமும் ஞாயிறன்று கிடைக்காது. தூர இடங்களிலிருந்து வரும் கடிதங்கள் இரண்டு மூன்று நாட்கள் இடையே தூங்கவும் நேரிடும். 'ஷிப்டு' முறை ஏற்படுத்தி நடத்த ஒரு கோடி அதிகம் வேண்டுமென்று கூப்பாய் அழுகிறார். அந்த அழுகை ஒலியைத் தொடர்ந்து ராணுவம் பாதுகாப்புக்கு 168 கோடி ரூபாய் என்ற அலட்சிய ஒலியும் கேட்கிறது இந்த லட்சணத்தில் சைவத்தைக் காப்பாற்ற நிலைதகள் பிரசாரம் செய்யப் புறப்பட்டது போல—காங்கிரசைக்காப்பாற்ற மதுவிலக்குப் பிரசாரம் என்ற திரைமறைவில், ஒரு பிரச்சாரக் கூட்டம் புறப்படப்போகிறது. அதற்குச் சில லட்ச ரூபாய்கள் செலவு! ஐந்து ஏழா மிலம் கிடைக்காத ஆகஸ்ட் 'தியாகி'களுக்கெல்லாம் இது ஒரு புதுவாய்ப்பு. மதுவிலக்கை ஒழுங்காக அமுல் நடத்த அருகதையற்றவர்கள் பிரசாரம் செய்யப்போகிறார்களாம். பிரஷன் தொல்லை பொறுக்க முடியவில்லையே யென்று ஓலமிட்டால்—இது கல்கத்தா மெயில் விபத்தைவிட மும்மையா என்று கேட்கிறார் காமராசர்! நாம் கேட்கிறோம் காமராசரை, தங்களுக்கு கேலம் சிறைச்சம்பவம் நினைவு இருக்கிறதா என்று! இருபத்திரண்டு பிணங்கள் சேலத்துச்சிறையில் சாய்ந்தன. கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தில் இறங்கிஞல் அதை நாமும் வன்மையாகக்கண்டிக்கிறோம். அதற்காக அத்தனை பிணங்கள் விழவேண்டுமா? அத்தனை பெற்றோர்கள் அழ வேண்டுமோ... அந்த வாலிபர் கட்குத் திருமணமாகியிருந்தால்இருபத்திரண்டு தாலிகள் அறுந்துவிழுந்திருக்குமே. மஞ்சள் பெட்டியின் மாத் [illegible] தால் அவர்கள் பூமி [illegible] அழிந்திருக்குமே!...

கூண்டில் அடைபட்ட கிளி கொட்டமடித்தால் குச்சியை எடுத்துக் குத்திக்கொல்வதில்லை...... ஆனால் மக்கள் சர்க்கார்மனிதரை கூண்டுக்குள்போட்டு சுட்டு, பிணக்கொலு வைத்துவிட்டார்கள். இந்தக் கொலு மக்கள் ஆட்சியில் இருக்கலாமா?... இவையெல்லாம் கேட்கும் நாங்கள் அடக்கப்படுகிறோம். எழுத-எண்ண-பேச-நடக்க உரிமை கிடையாது. நிலைமை போகும் போக்கைப் பார்த்தால். நெருக்கடியான இடத்தை நாம் அணுகிக்கொண்டிருக்கிறோம் [illegible]து புரிகிறது.

இந்த நேரத்தைச் சமாளித்தாக வேண்டும். அதற்குத் துணிவும் நேர்மையும், கொள்கை வெறியும் வேண்டும். இங்கு கூடியுள்ள ஆயிரமாயிரம் இளஞ்சிங்கங்களே! சாவிற்கு நிருமாட்டவரே!... திறனுடைத்தோரே! அழகிரியின்புகழ்படி அஞ்சாமை பெறுவோம்...... பட்டுக்கோட்டையாரின் பாதையிலே பழமை பாசிகளைச் சாடுவோர்... வாரீர்!..." என்பதாக நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்... இறுதியில் "நாங்கள் தயார்" என்று கூட்டம் எதிரொலி செய்தது. இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

## தி. மு. கழகக் கட்டட நிதி

| | ரூ. அ. பை. |
|---|---|
| முன் வரவு | 293—0—0 |
| பழம்நீ, சென்னை | 10—0—0 |
| தி. ச. ஆறுமுகம், குடிபேற்றம் | 1—0—0 |
| ஆர். கேசவன், கிருஷ்ணகிரி | 2—0—0 |
| பி. ஏ துரை, வேலூர் | 5—0—0 |
| தி. மு. க. தண்டையார்பேட்டை கிளை | 10—0—0 |
| | 321—0—0 |

## மந்திரிசபையில் மாற்றங்கள் ஏற்படலாம்

### டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு ஒரு 'பிரைஸ்' அடிக்கும்!

### இருமந்திரிகள் விலகியதன் விளைவுகள்

புதுடில்லி, ஏப். 9—

இம்மாத இறுதிக்குள் பண்டித நேரு தனது மந்திரி சபையில் சில மாறுதல்களைச் செய்வாரெனத் தெரிகிறது.

சியாம்பிரசாத் முகர்ஜியும், நியோகியும் ராஜிநாமா செய்ததின் விளைவாகவே இம்மாறுதல் நிகழுமெனச் சொல்லப்படுகிறது. தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்தொழில் அமைச்சராவாரெனத் தெரிகிறது.

மீண்டும் பதவியேற்கும்படி தோழர் நியோகியை வற்புறுத்தும் முயற்சி பயனளிக்காதெனத் தெரிகிறது. தான் மீண்டும் பதவி ஏற்க மாட்டேனென்று தோழர் நியோகி பண்டித நேருவிடம் சொல்லிவிட்டாராம். சிறுபான்மையோர் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில் பண்டித நேருவிடம் அவருக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாதாம். பாக்கிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கிழக்கு வங்கத்திலிருந்து வந்தவர் என்ற முறையிலும், இந்தியாவுக்கும், பாக்கிஸ்தானுக்குமிடையே வர்த்தக உறவுபற்றி பேசிய இந்திய வர்த்தக மந்திரியாக இருந்தும், தான் இந்தியா-பாக் பேச்சு வார்த்தைகளில் இடம் பெறாதது அவரது ராஜிநாமாவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

### ஜி ஐ பி. இரயில்பாதையில் விபத்து

பம்பாய், ஏப். 9—

இன்று டாங்கர்காறுக்கும், மண்டுவாவுக்குமிடையே அலகாபாத் பம்பாய் எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தை விட்டுக் கீழிறங்கியதன் விளைவாக 37 பிரயாணிகள் காயப்பட்டனர் இருவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

இந்த விபத்து நேரக் காரணம் என்ன என்பது தெரியவில்லை.

### குழந்தையைக் கொன்றாள்

#### வறுமையேகாரணமாம்

திருநெல்வேலி, ஏப். 6—

தன்னுடைய நான்குமாத குழந்தையை தண்ணீரில்மூழ்கச்செய்து கொன்றதாக 30 வயதுடைய மாணிக்கம் என்னும் ஒரு பெண் பாளையங்கோட்டை போலீஸாரால் கைதுசெய்யப்பட்டாள்.

இக்கொலைக்குக் காரணம் விசாரிக்கப்பட்டபோது வறுமையினுலும், தன் கணவனுக்கு வேலை கிடைக்காததாலும் பிள்ளையைக் காப்பாற்றவழியின்றி, குழந்தையை அப்பெண் கொன்றதாகச்சொல்லப்படுகிறது.

### ஊர்போக அனுமதி பெறவேண்டுமாம்!

#### காமாவுக்கு உத்தரவு

லண்டன், ஏப். 10—

பிச்சுவானுலாந்து தலைநகரான ஸிரோவேக்கு காமா செல்லவேண்டும் என்ருல், முன்னதாக மனுச் செய்து அனுமதி பெறவேண்டும் என்றும், அவருடன் ஒருசர்க்கார் ஆபீஸர் வருவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காமா இப்போழுது லபாட்ஸியிலேயே தங்கியிருக்கிறார்.


இந்து சட்ட இருத்த மசோதா ஆதரிப்பு

# பெண்கள் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக
12—4—50 புதன் மாலை 3-மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்

தலைவர்:— மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார்
திறப்பாளர்:- அலமேலுமங்கைத்தாயாரம்மாள் Ex. M.L.C.
வ. குழுத் தலைவர் :— டாக்டர். எஸ். தர்மாம்பாள்

சொற்பொழிவாளர்கள்:
பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்,
வ. ப. தாமரைக்கண்ணி அம்மையார்,
ஜோதீஸ்வரி அம்மையார்,
வெற்றிச்செல்வி அன்பழகன்,
எம். காந்தியாயினி M. A. B. T.

அலமேலு அப்பாத்துரை,
மாநாட்டு அமைப்பாளர்.

திராவிடத் தாய்மார்களே! மாணவிகளே!! திரண்டுவருக!!!
குறிப்பு ;— பிரவேச கட்டணம் கிடையாது.

# இந்தியா விஞ்ஞான கருவி ஒன்றை உற்பத்தி செய்கிறது!

லண்டன், ஏப். 10—

இந்திய சர்க்காரின் சிவில் ஏவியேஷன் லாபரேட்டரி புது விஞ்ஞான கருவியைக் கண்டுபிடித்திருக்கிறது. உலகிலேயே வேறெங்கும் இம்மாதிரி கருவி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

விமானங்களில் இவ்வளவுதான் பாரத்தை ஏற்றலாம் என்பதை இக் கருவியைக் கொண்டு நிர்ணயிக்க முடியுமாம்.

இந்திய வான ஆராய்ச்சி இலாகா இரு புது விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கின்றன. மேல் பகுதியிலுள்ள காற்று பற்றி விவரங்களை அறியும் இக் கருவிக்கு 'ரேடியோ ஸோண்டே' என்று பெயராம்.

இக்கருவி டில்லி, பூனாவிலுள்ள சர்க்கார் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவையாம்.

## ரயில்மீது அடிக்கடி தாக்குதல்

லண்டன், ஏப். 10—

மலேயாவில் ஜெஹுருக்கும் கொம்பிற்கு மிடையேயுள்ள 20 மைல் ரயில்வே பகுதியில் ரயில்மீது தாக்குதல் அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. சிங்கப்பூரிலிருந்து வந்த ஒரு மெயில் வண்டி மூன்றும் முறையாகத் தாக்கப்பட்டிருக்கிறது. —ராய்டர்.

## பண்டத்திற் கேற்ற பணம் தாருங்கள்

சிட்னி, ஏப். 10—

இந்தியானாவில் பெட்போர் என்ற இடத்தில் ஹோட்டல் வைத்திருக்கும் ஒருவர், தான் கொடுக்கும் உணவுப்பொருள்களுக்குக் குறிப்பிட்ட விலை கிடையாது என்றும், சாப்பிட்டு விட்டுச் செல்பவர்கள் திருப்தியடைந்து அவைகளுக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்று கருதுகிறார்களோ, அவ்வளவு தொகையை கொடுத்து விட்டுப் போகலாம் என்கிற விசித்திர வழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

சாப்பிட்டு விட்டு போகிறவர்கள் பணம் போடுவதற்காக ஒரு உண்டி வைக்கப்பட்டிருக்கிறது.

இதனால் தனக்கு நஷ்டம் எதுவும் வந்துவிடாது என்றும் யாரும் ஏமாற்றிவிட்டு செல்லமாட்டார்கள் என்றும், அவர் கூறுகிறார்.

## எவரெஸ்ட் உச்சியை அடைய

### அனுபவம் உள்ளவர்கள் தேவை

லண்டன், ஏப். 9—

"உலகிலேயே மிகவும் உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வெற்றியடைய அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை இவர்கள் போதிய அளவுக்கு இல்லாததால் தான் எவரெஸ்ட் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமலிருக்கிறது" என்று கனடிய மலையேறும் நிபுணர் எர்ல் டென்மன் கூறினார்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு இவர் தன்னந்தனியாக எவரெஸ்ட் மீது ஏற முயன்றார்.

இவர் கூறுவதாவது: எவரெஸ்ட் மலை மீது முதல் தடவையாக ஏறி யாரும் வெற்றி கண்டுவிட முடியாது. பல முறை ஏறி பழக்கப்பட்டிருப்பவர்கள் தான் இதில் ஏற முடியும்.

1952 வரையில் எவரெஸ்ட் மீது ஏற காலம் நேரமாக இல்லை என்று திபேத்தியர்கள் கூறுகிறார்கள் எவரெஸ்ட் உச்சியை எப்படியும் எட்டிவிட முடியும் என்று டென்மன் நம்பிக்கையுடன் இருக்கிறார். (ஞானம்)

# நாடெங்கும் அழகிரியின் நினைவு நாள்

## செயங்கொண்டம்

செயங்கொண்டம், ஏப் 6—

4—4—50ந்தேதி அன்று மறைந்த மாவீரர் அழகிரிசாமி நினைவுநாள் இவ்வூர் தி. மு. க. சார்பில் கொண்டாடப்பட்டது. அதுபொழுது இயக்கத்தோழர்கள் முக்கிய தெருக்கள் வழியாக இலட்சிய முழக்கத்துடன் ஊர்வலம் புறப்பட்டு மாலை காந்திப்பூங்காவை வந்தடைந்தனர். விழாவிற்கு தோழர் கே. பி. முகமது காசிம் அவர்கள் தலைமை தாங்கினார். அதுபொழுது தோழர்கள் எம். பாஸ்கரனர், இராமச்சந்திரன் அரங்கநாதன் காசாடீசேன் ஆகியோர் அழகிரியின் தொண்டு குறித்தும், அவர் வாழ்க்கை நிலையைப்பற்றியும் அழகாகச் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தலைவர் தன் பின்னுரைக்குப் பிறகு செயலாளர் தோழர் வை இராசகோபால் நன்றிகூறக்கூட்டம் இனிது கலைந்தது.

## இருகூர்

இருகூர், மார்ச். 30—

பகுத்தறிவுப்படிப்பகத்தின் சார்பில் 28-3-50 அன்று மாலை மாவீரன் அழகர்சாமியின் நினைவுநாள் தோழர் எம். கே. மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முடிவுரையாக அழகர்சாமியின் அருந்தொண்டினைப்பற்றிப் பேசினார். அடுத்துத் தோழர்கள் என். கருப்பண்ணன், பி. கருப்பண்ணன், கே. மருதாசலம், ஐ. என். பி. நிவாசம் ஆகியோர் தளபதி அழகர்சாமி அவர்கள் ஆற்றிவந்த அருந்தொண்டுகளை எடுத்துக் கூறி, அவர் மறைவு நமது பகுத்தறிவு இயக்கத்துக்கும், திராவிடநாட்டுக்கும் ஈடுசெய்யமுடியாத பெரியதொரு நட்டமாகும் என்றும், அவரைப் பின்பற்றி [illegible] அழகர்சாமிகள் தோன்றி பணி[illegible] ஆற்றவேண்டுமென்றும், தளபதி அழகர்சாமி விட்டுப்போன சேவைகளைப் பூர்த்தி செய்ய வாலிபர்களும், மாணவர்களும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

## அம்மாப்பேட்டை

சேலம், ஏப். 6—

மேற்படி நகரக் கிளையின் சார்பில் 30—3—50 அன்று மாலை மறைந்த மாவீரன் அழகர்சாமி நினைவு வாரத்தை முன்னிட்டு ஓர் பொதுக் கூட்டம் நதிமுல்லா மக்கான் தெருவில் தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள் தலைமையில் கூடியது.

தளபதி அழகர்சாமியின் பெரியதொரு படத்தினை மலர்மாலையால் அணி செய்யப்பட்டு, மேடையின் முன்னர் பொது மக்கள் யாவரும் காணும் வண்ணம் வைக்கப்பட்டிருந்தது.

தலைவரின் முன்னுரைக்குப் பின், தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், டி. என். ராமலிங்கம், ஸ்டாலின் கே. இராமசாமி, ஏ. சித்தையன், ஏ. குமரேசன் முதலியவர்கள் அஞ்சாநெஞ்சனின் அருந்தொண்டினைப் பற்றிப் பேசினர்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் அரிய சேவையையும், அவர் பொது மேடைகளில் பேசும் தனி முறையையும், கேள்விகளுக்குச் சட்டென எதிரியும் திகைக்கும் வண்ணம் பதில் கொடுக்கும் தன்மையையும், கூட்டங்களில் மாற்றுக் கட்சிக்காரர்களால் ஏற்படும் இடையூறுகளைத் தன் சொல்லாற்றலால் சமாளித்துக் கூட்டத்தினை மிக வெற்றிகரமாக முடிக்கும் பண்பும் சிறப்பாக திராவிட மக்கள் என்றும் தங்கள் மனத்திலிருந்தும் மறக்க முடியாத மாவீரன் அழகிரி எனவும் சுமார் 1-மணிநேரமாக அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

விளம்பர உறுப்பினர் நன்றிகூற அடன் கூட்டம் இனிது முடிந்தது.

## கோலார் தங்கவயல்

கோ. தங்கவயல், ஏப். 6—

2—4—50 அன்று காலை கழக மனையில் கொடியேற்றப்பட்டு, அழகிரி நினைவாக அழகிரி படிப்பக மன்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்று மாலை இவ்வூர் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் அழகிரிப் பந்தலில் ஓர் பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பொதுக்கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

தோழர் கே. எஸ். கோபாலகிருட்டிணன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, நந்தி துர்க்கம் மைன்ஸ் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஏ. இரத்தினசபாபதி அவர்களைத் தலைமைவகிக்கும்படி முன்மொழிய, தோழர் கே. ஜி. சின்னராசன் அவர்கள்வழிமொழிய தோழர் ஏ. இரத்தினசபாபதி தலைமை தாங்கினார். தலைவர் தலைமையுரையில், தான் அழகிரியுடன் சேர்ந்து வேலை செய்தது பற்றியும் அழகிரியின் சேவையைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

அடுத்துத் தோழர் டி. கே. சின்னத்துரையவர்கள் இவ்வூர் தி. மு. கழகம் செய்து வரும் வேலையையும், கழகக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினார்.

கடைசியாக சென்னைத் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் அழகிரியின் தொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலை திட்டங்கள், தொழிலாளர் பிரச்னைகள் ஆகியவற்றைப்பற்றி இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

கடைசியாக செயலாளர் தோழர் கே இராகவன் நன்றி கூற, தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் [illegible] மணிக்கு இனிது முடிவுற்றது.

## குன்னூர்

குன்னூர், ஏப். 8—

4-4-50 அன்று மாலை ஜவஹர் பேட்டையில், தி.மு.கழகத்தோழர்களால் அஞ்சாநெஞ்சன் நினைவுநாள் தோழியர் தாமரை அம்மையார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தைத் தோழர் முத்து அவர்கள் திராவிடப்பண்பாடி ஆரம்பித்துவைத்தார். தலைவர் முன்னுரையாகச் சேலையில் தன்மான இயக்கத் தளபதி அழகிரியின் வாழ்க்கை திராவிட இளைஞர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் தி. மு. க. வளர்ச்சியைப் பற்றியும் பேசினார்.

அடுத்து கோவைத் தோழர் ஜி. என், ராசு அவர்கள் சுமார் 1-30 மணிநேரம் அழகர்சாமி நாட்டிற்கு ஆற்றிய சேவை, இன்றைய ஆட்சியாளரின் அடக்குமுறை, நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுடைய இன்றைய நிலைமை ஆகியவைபற்றிவிரிவாகப் பேசினார். தலைவர் பின்னுரையுடன் செயலாளர் தோழர் முருகன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

## மணப்பாறை

மணப்பாறை, ஏப். 5—

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், மாண் பூண்டி ஆற்றங்கரையில் 2—4—50 அன்று மாலை செயலாளர் தோழர் சமுத்திரபாண்டியன் தலைமையில், பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியின் நினைவுநாள் விழா நடைபெற்றது அதுபோது தோழர்கள் எஸ். தனுஷ்கோடி, என். வடிவேலன், மு. தங்கராயகம், வ. கதிர்வேல் ஆகியோர் அழகிரியின் வாழ்க்கை தொண்டுகுறித்து விரிவாகச் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் அழகிரி நாட்டுக்குச் செய்த பணியினைப் பற்றி விரிவாகப் பேசி முடித்தார். தோழர் கதிர்வேல் அவர்களின் தீர்மானத்தின்படி அனைவரும் மறைந்த மாவீரனுக்கு, வீரவணக்கம் செலுத்திப் பின், நன்றிகூறுதலுடன் கூட்டம் இனிதுமுடிந்தது.

## சத்தியமங்கலம்

சத்தியமங்கலம், ஏப். 8—

குறள் மன்ற மைதானத்தில், திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் 3-4-50 அன்று அழகிரிநினைவுநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் திராவிடன் அவர்கள் திராவிடப்பண் இசைத்தார். தோழர் எஸ். ஆர். குமாரசாமி அவர்கள் கூட்டத்திற்குத்தலைமைதாங்கினார். தலைவர் முன்னுரைக்குப்பின், செயலாளர் தோழர் எஸ். ஜி. கண்ணப்பன் "இன்றைய அரசியல்" என்பது பற்றி விரிவாகப் பேசினார். அடுத்து ஈரோடு தோழர் எஸ் அப்பாவு அழகிரி நினைவுநாளைக் கொண்டாட வேண்டிய அவசியத்தைப்பற்றியும், அன்னார் வாழ்க்கை சம்பவத்தையும், பல ஆதாரங்களைக் காட்டி திராவிடநாடு தனியாட்சிபெற எல்லோரும் ஒன்றுபடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு மிக அழகாக 1-30 மணிநேரம் பேசினார். கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, ஏகமனதாக நிறைவேறியது.

## சக்கிப்பேட்டை

செங்ளூர், ஏப். 8—

2—4—50 ஞாயிறுகாலை 10 மணிக்கு தி. மு. க. சார்பில் எல். எல். கே. சக்கிப்பேட்டை மலைபேட்டையில் தோழர் மு. இராமநாதம் அவர்கள் தலைமையில், அழகிரி நினைவுநாள் விழா நடைபெற்றது. அதுபோது. தோழர் கேஇல. கங்காதரன், அவர்கள் அழகிரியின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். அடுத்துப்பேசிய தோழர்கள். ஆ. ம. தர்மலிங்கம், ஆ. ச. நடேசன், மு. சி. வேணு, தி. ரா. தர்மராசன் ஆகியோர் அழகிரி அவர்களின் அரியதொண்டினையும், அன்னாரின் தீரச்செயலையும் பாராட்டி, அவர் விட்டுச்சென்ற பணியை ஒவ்வொரு திராவிடத் தோழனும் செய்துமுடிக்க வேண்டும் எனப் பேசி முடித்தனர். சிவகாசி தி. மு. க. செயலாளர் தோழர் ஆரோன் தங்கய்யா அவர்களும் கூட்டத்தில் அழகிரியைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் தம் முடிவுரைக்குப்பின், தோழர் இளஞ்சேரன் நன்றி கூறும் முகத்தான் கட்சிபேதமற்று இந்த நினைவு நாளில் கலந்துகொண்ட தோழர்களைப் பாராட்டி இதே முறையில் ஒவ்வொரு இயக்கத்தின் தினத்தையும் கொண்டாடவேண்டும் எனக்கேட்டு நன்றி கூறிமுடித்தார்.

# வெட்டுக்கிளிகள் உற்பத்தி

காரச்சி, ஏப். 10—

செங்கடல். அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வெட்டுக்கிளிகள் ஏராளமாக உற்பத்தியாகிறதென்றும், இவைகளால் பயிர்களுக்கு ஆபத்து நேரிடாமல் தடுக்க முன்னேற்பாடுகள் எடுக்கவேண்டும் என்று பாகிஸ்தானிலுள்ள பயிர் பாதுகாப்பு அதிகாரி ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

ஏமன், ஏடன், ஸவூதி அரேபியா ஆகிய நாடுகளில் அதிகமாக வெட்டுக்கிளிகள் உற்பத்தியாகின்றனவாம்.

எல்லை மாகாணத்திலுள்ள டேரா இஸ்மைல்கான் இல்லாவில் வெட்டுக்கிளி படையெடுப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

பலுசிஸ்தானிலுள்ள கலாட் ஸ்டேட்டில் வெட்டுக்கிளி முட்டைகள் ஏராளமாகக் காணப்படுகின்றனவாம்.

இவைகளை ஒழித்துக்கட்ட பாகிஸ்தான் அதிகாரிகள் தீவிர முயற்சி செய்துவருகிறார்களாம்.

---

**தி. மு. கழகம்**

**இதுவரை தழைத்துள்ள கிளைகள்**

**473**

# ஆசிரியருக்கு முடங்கல்

## குற்றவாளி யார்?

ஐயா,

வணக்கம். 5-4-50 அன்று நடந்த இண்டர்மீடியட் தமிழ்ப்பாடபுத்தக, இலக்கண, வினாத்தாளில் பற்பல தவறுகள் நிகழ்ந்துள்ளன. வினா 8, 9-க்கு முறையே அம்சம் 10, 10 எனக்குறியிட்டு, 'இண்டர்மீடியட் மாணவரின் வினா Viii ஐ விட்டுவிடுக புதுமுகமாணவர் வினா 1x ஐ விட்டுவிடுக" என்று குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளதால், மாணவர் இழக்கும்அம்சம் 10 வினா 1-ல் எ, பி, சி, டி என நான்கு உட்பிரிவுகள் பிரித்து அவற்றிற்கு முறையே அம்சம் 4, 10, 4, 4, என குறியிட்டு, "1-இப்பிரிவில் (பி) கட்டாயம். ஏனையவற்றுள் இரண்டு உட்பிரிவுகட்கு விடை எழுதுக" என்று குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விபரீதத்தினால் மாணவரிழக்க நேரும் அம்சம் 4. மொத்த அம்சம் 100 [illegible] 98 தான் உள்ளது. [illegible] ம் 2. ஆக [illegible] மொத்தம் 16-ஐ எவ்விதமாறுபாடுமின்றி மாணவர் இயற்கையாக வாங்கும் அம்சத்தோடு கட்டாயம் கூட்டவும். குற்றம் மாணவர்களுடையதல்ல. பல்கலைக்கழகத்தாருடையது. வினா 2-க்கு அம்சம் குறித்து 3 4-க்கு விட்டு, வினா 5-க்கு அம்சம் குறித்துள்ளதிலிருந்தும், மொத்த அம்சம் 98 காணப்படுவதிலிருந்தும், 3, 4, 5 ஆகிய 3 கேள்விகளுக்கும் அம்சம் 15 எனப்புலனாகிறது.

6-4-50 கடலூர். } இங்ஙனம்: மன்னை அரசு.

* * *

## ஆடை கொடுப்போர் அவதியுறுகிறார்கள்

ஐயா,

எங்கள் ஊரில் சுமார் 15000 நெசவாளிகளுக்கு மேல் இருக்கும் இந்நெசவாளருக்கு வேலை செய்தும் கூலி இல்லாமலும், நூல் கிடைத்தால் துணி விற்காமலும், துணி விற்றால் நூல் கிடைக்காமலும் இருந்துவருகிறது. இவர்களின்மாத வருமானம் சுமார் 18 ரூபாய்தான். கேழ்வரகுக்குக்கூட காணாத இந்த 18 ரூபாயை வைத்துக்கொண்டு, இவர்கள் எப்படிச்சீவனம் நடத்துவது. இவர்கள் ஒரு வாரத்தில் 4 நாள் கேழ்வரகுக் கஞ்சியும் மீதி மூன்று நாள் கிழங்குவகையுமே இவர்கள் சாப்பாடாய் இருந்து வருகிறது. இதிலும் பாதி நெசவாளிகளுக்குத்தானே வேலை கிடைக்கிறது. வேலை இல்லாத பாதி நெசவாளிகள் சட்டியைத் தூக்கிப் பிச்சை போடுங்கள் என்று கேட்கக்கூட சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். இதை இச்சர்க்கார் கவனிக்குமா? இப்படிக்கு

12-3-50 ஸ்ரீவில்லிபுத்தூர் } சு. ராசன்

---

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras 1.